# மாவை ஆலய உற்சவம், பூஜைகள் ரத்து

Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி [எண்]: 49
போன் : 389

மலர் 12
இதழ் 147
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்   ஆனி 24   ஜமா. அவ் 3   புதன்கிழமை   [8-7-70]

**ஈழநாடு சந்தா**

| | | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|---|
| 3 | மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 | மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 | வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

## தடைஉத்தரவை நிறுத்த கோரிய மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் உள் வீதிக்குச்சென்று ஹரிஜனர்வணங்குவதைத்தடை செய்யக்கூடாதென்றும் அவர்கள் அங்கு சென்று வணங்குவதற்கு இடையூறு செய்யக்கூடாதென்றும் யாழ்ப்பாணமாவட்ட நீதிமன்றத்தினல் நேற்றுக் காலை மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதீனகர்த்தாவுக்கும் திரு. ஸி சுந்தரலிங்கத்துக்கும் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை நிறுத்திவைக்கும்படிகோரி நேற்றுப் பிற்பகல் மாவட்ட நீதிபதி ஜனப் எம். எம். ஐ. இஸ்மாயில் முன்னிலையில் திரு. ஸி. சுந்தரலிங்கம் தாக்கல் செய்த மனுவை மாவட்ட நீதிபதி நிராகரித்தார்.

# “மாவை ஆலயத்துக்குள் ஹரிஜனர் செல்வதை தடுக்கக்கூடாது”

## குருக்கள், சுந்தரருக்கு நீதிமன்றக் கட்டளை

### திறந்த கதவுகளை பூட்ட விடாமல் ஆலயவாசலில் பொலிஸ் காவல்

யாழ்ப்பாணம்; புதன்

மாவிட்டபுரம் ஆலயத்தினுள் வழிபடச் செல்லும் ஹரிஜனங்களை மாவை ஆலய ஆதீன கர்த்தாவோ திரு ஸி சுந்தரலிங்கமோ அவர்களின் ஏஜன்டுகளோ, பணியாட்களோ தடை செய்யக் கூடாது. மாவட்ட நீதிபதி இந்தஇடைக்காலத் தடையுத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

அட்டர்[illegible] ஜெனரல் யவோ உள் வீதியில் [illegible]

## திருவிழா நடைபெறாது; மாவையில் இன்று ஹர்த்தால்

ஹரிஜனர்கள் ஆலயத்தின் உள்வீதிக்குச் செல்வதையும் அவர்கள் அங்கு நின்று சுவாமிதரிசனம் செய்வதையும் தடுக்கக்கூடாதென்றும் அவர்களுக்கு இடையூறு செய்யக்கூடாதென்றும் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத்தடை உத்தரவைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன் ஆலயத்தின் முன்வாசல் கதவைப் பூட்டவிடாது பொலிசார் உத்தியோக உடையில் ஆலயத்தினுள் சென்று காவல்புரிவதால் அவர்கள் ஆலயத்தின் புனிதத்தன்மையைக் கெடுத்துவிட்டார்களென்பதால் இன்று நடைபெறவிருந்த வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றத்திருவிழாவை நிறுத்திவைப்பதென்று மாவை ஆதீனகர்த்தா தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது. நேற்றுக்காலை நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் பின்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் பூஜைகள் எதுவும் நடைபெறவில்லையென்று ஆலயத் தொண்டர் ஒருவர் தெரிவித்தார். என்ன நடந்தாலும் திட்டமிட்டபடி இன்று கொடியேற்றம் நடந்தேதீரும் என்று அங்கு சென்ற பத்திரிகை நிருபர்கள் முன் திரு. ஷண்முகநாதக்குருக்கள் நேற்றுமாலை தெரிவித்தாராயினும் இன்று திருவிழா நடைபெறமாட்டாதென ஆதீனகர்த்தா பின்னர் துண்டுப்பிரசுர மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தியதாக நமது நிருபர் ஒருவர் தெரிவித்தார்.

நீதிமன்றம் இடைக்கால தடைஉத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து கோயிலை பொலிசார் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாலும், வழமைபோல் உற்சவம் நடைபெற முடியாமலிருப்பதாலும் தாங்கள் கடையடைப்புச் செய்து, கறுப்புக்கொடிகளைத் தொங்கவிட்டு இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்போவதாக மாவை ஆலயத்தின் முன்னுலுள்ள கடைக்காரர்கள் சிலர் தெரிவித்தனர்.

## ‘திருவிழா நடக்காவிடினும் நாங்கள் உள்ளே செல்வோம்’

‘மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பித்தால் என்ன ஆரம்பிக்காவிட்டாலென்ன, நாங்கள் திட்டமிட்டபடி ஆலயத்தினுள் சென்று சுவாமி தரிசனம் செய்வோம்’ என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன [illegible]டம் தெரிவித்தார். வெகுஜன இயக்கத்தின் தொடர்ச்சியான போராட்டமும் பொதுமக்களின் ஆதரவுமே புதியதிருப்பத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்ததென்றும் இந்த இயக்கத்தை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கத் திட்டமிட்டிருப்ப[illegible]

### பசியால் உயிர்துறக்க துணிந்த குடும்பத்துக்கு உதவி:

## குடும்பத்தலைவியின் பரோபகாரம்

யாழ்ப்பாணம், புதன்

பசிக்கொடுமையால் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற தாய்க்கும் குழந்தைகளுக்கும் பரிவுடன் உதவவந்திருக்கிருர் குடும்பத்தலைவிஒருவர். பெயர் வெளியிட விரும்பாத அந்த பரோபகாரியான பெண்மணி பசிக்கொடுமையால் உயிர் துறக்கவிரும்பிய தாய்க்கும் குழந்தைகளுக்கும் வழங்கும்படிகோரி ரூ. 25 ரொக்கத்தை ‘ஈழநாடு’ காரியாலயத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தனது இரு குழந்தைகளின் பசிக்கொடுமையை சகிக்கமுடியாமல் குழந்தைகளுடன் ஒரு ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற பெண்பற்றிய செய்தியை இரு தினங்களுக்கு முன் ‘ஈழநாடு’ பிரசுரித்திருந்தது தெரிந்ததே.

கோண்டாவிலைச் சேர்ந்த வீரப்பர் செல்லம்மா அவர் குழந்தைகள் ருக்குமணிதேவி, சுப்பையா ஆகியமூவரும் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ‘பிள்ளைகள் பசியால் வாடினர். அதை என்னுல் பொறுக்க முடியவில்லை. அதனுல்தற்கொலை செய்துகொள்ள எண்ணி ரயில்முன் பாய்ந்தேன்’ என்று அந்தப் பெண் பொலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியான பெண் மணி பசிக்கொடுமையால் உயிர் துறக்கவிரும்பிய தாய்க் கும் குழந்தைகளுக்கும் வழங்கும்படிகோரி ரூ. 25 ரொக்கத்தை 'ஈழநாடு' திியை இரு தினங்களுக்கு முன் 'ஈழநாடு' பிரசுரித் திருந்தது தெரிந்ததே

கோண்டாவிலைச் சேர் ந்த வீரப்பர் செல்லம்மா அவர் குழந்தைகள் ருக்கு வில்லை. அதனால் தற்கொலை செய்துகொள்ள எண்ணி ரயில்முன் பாய்ந்தேன்' என்று அந்தப் பெண் பொலிசாரிடம் வாக்கு மூலம் கொடுத்திருந்தார்.

வெளிநாடுகளில்

# நம் தூதுவர்களாக இவர்கள் இடம் பெறலாம்?

கொழும்பு, செவ்வாய். பாகிஸ்தானில் புதிய இலங்கை ஹைகமிஷனராக காலியில் பிரபலவர்த்தகரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளருமான ஜனாப் பெய்ஸல் ஜுனைய்ட் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் இதுவரை இலங்கை ஹைகமிஷனராக விருந்த சே. ராஸிக்பரீத்துக்கு பதிலாக இவர் நியமிக்கப்படலாம் என்று தெரிகின்றது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப காரியதரிசிகளில் ஒருவரான, முன்னாள் செனட்டர் எல். ஏ. கரணகொட பீகிங்கில் திரு குணவர்த்தனவுக்கு பதிலாக தூதுவராக நியமனம் பெறலாம் என்று கருதப்படுகிறது.

காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்காவுடன் சிங்கள மகா சபை காலத்திலிருந்து தொடர்புகொண்டிருந்தவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான திரு ஆனந்தகுண சகரா மேற்கு ஐரோப்பாவில் ஒரு தூதுவராக நியமிக்கப்படலாம் என்றும் பேசிக்கொள்ளப் படுகின்றது. முன்னால் ஐ ஜி பி அலரிக் அபயகுணவர்த்தன, திரு பி. எச். வில்லியம் சில்வா, நெவில் கனகரட்ண, திஸ்ஸவிஜய ரத்ன ஆகியவர்களின் பெயர்களும் இது சம்பந்தமாக அடிபடுகின்றன. (சி பி ஏ)

## இன்று

யாழ்ப்பாணம் கோட்டை முன்னீஸ்வரன் கோவில் ஸ்நாபனபிசேகத்தின் ஐந்தாவது நாளாகிய இன்று "அன்பினால் காணும் அரும் பெரும் செல்வம்" என்னும் பொருள்பற்றி திரு. வே க. மயில்வாகனம் கதாப்பிரசங்கம்செய்வார்.

0 0 0

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்க ஆச்சிரம மண்டபத்தில் அகண்டநாம பஜனையும் அன்னதானமும் இன்று நடைபெறும்.

## பாத யாத்திரை

யாழ்ப்பாணம் புதன் ஆனி உத்திர தினத்தை முன்னிட்டு நாளை மாலை நல்லூர் சிவபூதவராயர் பஜனைக் கோஷ்டியினர் நல்லூர் சிவபூதவராயர் ஆலயத்திலிருந்து நுணுவில் பூதவராயர் ஆலயத்துக்கு பாதயாத்திரைசெல்வர் இக்குழுவுக்கு எஸ் பரமானந்தம் தலைமை தாங்குவார்.

# 56 வயதான ஆசிரியர்கள்

## 3 மாத முன்னறிவிப்புடன் ஓய்வு

யாழ்ப்பாணம், புதன் 56 வயதுக்குமேற்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் மூன்று மாத முன்னறிவித்தலுடன் ஓய்வுபெறவேண்டிய நடவடிக்கைகளை கல்வி இலாகா எடுத்துவருவதாகத் தெரிய வருகிறது

விசேஷ பயிற்சி. விசேஷ தராதரம் பெற்ற "ஸ்பெஷலிஸ்ட் ரீச்சேர்ஸ்" தவிர்ந்த ஏனைய ஆசிரியர்கள் 56 வயதைத் தாண்டியவர்களாக இருந்தால் அவர்களுக்கு மூன்றுமாத முன்னறிவித்தல் கொடுத்து ஓய்வு பெறச்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு ஒரு சிலருக்கு வழங்கியும், பலருக்கு வழங்காமலும் இருந்து சில முரண்பாடுகள் எழுந்ததால்தான் ஒரேமுறையான ஓய்வு உத்தரவு வழங்குவதற்காக இந்த முடிவுசெய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

கனோ, பணியாட்களோ தடை செய்யக் கூடாது. மாவட்ட நீதிபதி இந்தஇடைக்காலத் தடையுத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

அட்டர்னி ஜெனரல் வழக்காளியாகவும் ஆதீன கர்த்தா துரைசாமிக்குருக்கள் முதல் எதிரியாகவும் திரு. வி. சுந்தரலிங்கம் இரண்டாவது எதிரியாகவும் வைத்து நேற்று யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுதார் சார்பில் முடிக்குரிய புரக்டர் திரு. எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் முடிக்குரிய வழக்கறிஞர் திரு எல். குருசாமி ஆஜரானார்.

மாவிட்டபுரம் ஆலயத்தின் உள்வீதிக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்யவோ உள் வீதியில் நிற்கவோ ஹரிஜனர்களை ஆதீனக் குருக்களோ, திரு. சுந்தரலிங்கமோ, அவர்களது ஏஜண்டுகளோ, பணியாட்களோ தடுக்கவோ, இடையூறு செய்யவோ கூடாது என இடைக்கால தடை விதிக்கும் கட்டளையை மாவட்ட நீதிபதி நேற்றுப் பிறப்பித்தார்.

மாவட்ட நீதிபதியின் இந்தக் கட்டளை நேற்று நண்பகலே திரு. சுந்தரலிங்கத்திடம் வழங்கப்பட்டது. குருக்கள் அந்நேரம் கட்டளையை வாங்குவதற்கு இருக்கவில்லை. இதனால் ஒலிபெருக்கி பூட்டப்பட்ட பொலிஸ் காரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கோவில் வீதிகளில் மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடை உத்தரவு பற்றி அறிவித்தார்.

### எஸ்.பி.யின் வாக்குமூலம்

மாவட்ட நீதிமன்றத்தில் இந்தத்தடை உத்தரவுக்கான மனுதாக்கல் செய்யப்பட்டபோது வடபகுதிப் பொலீஸ் அதிபரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

## திரும்பினர்

கோட்டை, செவ். மொறட்டுவையிலுள்ள 'வெலோனா' நெசவாலையில் நடைபெற்றுவந்த வேலைநிறுத்தம் இன்றுமுடிவடைந்தது.

சுமார் 500 ஊழியர்கள் இலங்கை வர்த்தக ஊழியர்கள் சங்கத்தில் அங்கம்வகிப்பதற்கு முதலாளிமார் சம்மதம் வழங்க மறுத்ததால் கடந்த 26-ம் திகதி முதல் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். முதலாளிமார் அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டதால் ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பினர்.

— —

சுழிபுரம், செவ்வாய் சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் முன்பாகவுள்ள கடம்பமரத்தடியில் கதிர்காமத்திருவிழா தினமும் நடைபெற்று வருகின்றது, தினமும் பஜனை பூசைவழிபாடு முதலியன நடைபெறுகின்றன,

## "ஆசிரிய சங்கங்கள் கொண்ட இடமாற்றச்சபை அமைக்கவும்"

யாழ்ப்பாணம் புதன் "பின்தங்கிய இடங்களில் மூன்று வருடங்கள் சேவை செய்த ஆசிரியர்கள் சொந்த இடங்களில் ஏழுவருடங்கள் சேவைசெய்ய உரிமையளிக்கவேண்டும். வெளிமாகாணங்களில் நாலு வருடங்கள் சேவை செய்தவர்களுக்கு சொந்த இடங்களில் ஆறுவருடங்கள் சேவை செய்யவும், சொந்த இடங்களில் ஏழு வருடங்கள் சேவை செய்தவர்களை, பின் தங்கிய இடங்களில் மூன்று வருடங்கள் சேவை செய்யும்படி கட்டாயப் படுத்தவும், சொந்த இடங்களில் ஆறு வருடங்கள் சேவைசெய்தவர்கள் வெளிமாகாணங்களில் நாலு வருடங்கள் சேவை செய்யும்படி கட்டாயப்படுத்த வேண்டும்,"

தமது சங்கத்தினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட தீர்மானங்களை இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது. சங்கம் அனுப்பிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

"45 வயது நிரம்பிய ஆசிரியர்களை அவர்கள் விரும்பிய இடங்களிற் சேவை செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

"வருடத் தொடக்கத்திலேயே இடமாற்றங்களும் பதவியுயர்வு இடமாற்றங்களும் செய்யப்படவேண்டும்.

"அரசியற் காரணங்களுக்காக இடமாற்றங்கள் நிகழக்கூடாது."

எல்லா ஆசிரிய தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், கல்வியதிகாரிகளும் கொண்ட இடமாற்றச்சபை நிறுவப்படவேண்டும்."

என்ன ஆரம்பிக்காவிட்டாலென்ன, நாங்கள் திட்டமிட்டபடி ஆலயத்தினுள் சென்று சுவாமி தரிசனம் செய்வோம்' என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு எஸ் ரி. என். நாகரத்தினம் நேற்று மாலை நமது நிருபரி பொதுமக்களின் ஆதரவுமே புதியதிருப்பத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்ததென்றும் இந்த இயக்கத்தை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் திரு. நாகரத்தினம் கூறினார்.

## கொழும்பில் நடந்த முயற்சி ஸ்தம்பிதம்

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண்பதற்காக சமரசப் பேச்சுவார்த்தையொன்றை நடத்துவதற்கும் சமரச உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளுவதற்கும் திரு. வி. பொன்னம்பலமும் மற்றும் சிலரும் நேற்று நண்பகல்வரை பெரும் முயற்சி செய்ததாகவும்இந்தமுயற்சியின் விளைவாக தபால் தந்தித்தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பலருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இதைத் தொடர்ந்து விசேஷவிமானமொன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி மாவை ஆதீனக்குருக்களையும், திரு வி. சுந்தரலிங்கத்தையும் அழைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் ஆனால்கடைசி நேரத்தில் இதைக் கைவிட வேண்டி நேர்ந்ததாகவும் நமது கொழும்பு நிருபர் தெரிவிக்கின்றார். மாவட்ட நீதிமன்றத்தில் அட்டர்ணி ஜெனரல்மனுதாக்கல் சய்து இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்க கோரி நடவடிக்கையெடுப்பாரென்பது சமரச முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்குக் கடைசி நேரம்வரை தெரியாமலிருந்ததே இதற்குக்காரணமென்றும் நமது நிருபர் கூறுகிறார்.

# யாழ்ப்பாணம் வர முடியாதிருக்கிறதாம்

ஊரதீவு, செவ்வாய் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளையை அங்குரார்ப்பணம் செய்வதற்கென ஊர்காவற்றுறைக்கு வருமாறு ஊர்காவற்றுறைப் பட்டினசபைத் தலைவர் விடுத்த அழைப்புக் கடிதத்துக்கு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதிலளித்துள்ளார். ப. ச. தலைவர் திரு. எஸ். இம்மனுவலுக்குப் பிரதமர் எழுதியுள்ள பிரஸ்தாபக் கடிதத்தில் தமக்கு கொழும்பில் பல வேலைகள் இருப்பதால் தான் மேற்படி அழைப்பை ஏற்க முடியாமைக்கு மிகவும் வருந்துவதாகத் தெரிவித்துள்ளார்.

கோட்டை, செவ்வாய் சேலைகள், சேட்டுக்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உடைகள், மருந்துகள், பிஸ்கோத்துகள், குளிர் பானங்கள் ஆகியவற்றிற்கு மிக விரைவில் கட்டுப்பாட்டு விலை வரும்.

# ஆட்சிமன்றம் 19-ம் திகதிமுதல் அரசியல்நிர்ணயசபையாக இயங்கும்

கொழும்பு, செவ். இலங்கை ஆட்சிமன்றம் இம்மாதம் 19-ம் திகதி முதல் அரசியல் நிர்ணயசபையாக இயங்கும்! இத்தகவலை அரசியல் திட்ட அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று தெரிவித்தார்.

அரசியல் நிர்ணயசபை விசேஷ அதிகாரங்கள் கொண்டதாக இருக்கும் என்றும், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் அரசியல்நிர்ணயசபை உறுப்பினர்களாக இருப்பார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். இன்று பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் கொல்வின் பேசினார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது'

"புதியஅரசியல் அமைப்பு, சுதந்திரமான சுயேட்சையான இலங்கை மக்களின் அதிகாரத்தை எடுத்துக்காட்டுவதாக அமையும். சிம்மாசனப்பிரசங்கத்தில் தெரிவித்திருந்ததுபோலவே முழு அதிகாரமும் அரசியல் நிர்ணயசபைக்கு வழங்கப்படும். சுதந்திரம் மக்கள் கையில்தான் இருக்கும். வெளிநாட்டு அரசாங்கங்களின் யோசனையின்பேரில் இதை நாம் திணிக்கவில்லை. மக்களின் பூரண விருப்பத்தை நிறைவேற்றுகிறோம்."

"அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டபின் அதிகாரம் இதைவிட வேறெந்த இடத்திலும் இருக்கமாட்டாது. பூரண அதிகாரம் கொண்டதாக நிர்ணய சபை அமையும்

யூகோஸ்லாவியாவில் உள்ள அரசியல் அமைப்புப் போன்றுதான் இங்கும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட விருப்பதாக சில வட்டாரங்களில் கூறப்படுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று நிருபர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், அதற்கு நான் ஒன்றும் சொல்லமுடியாது. நாங்கள் இதர சுதந்திர நாடுகளில் சுதந்திமாக உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புக்களைப் படித்து ஆராய்ந்து அறிய முயற்சிப்போம் என்று கூறினார்.

"இப்போதைய அரசியல் அமைப்பில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் 29-ம் ஷரத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்தாலும் நீக்கமுடியாதென்று ஒரு வழக்கில் பிரிவுக்கவுன்சில் தீர்ப்பு அளித்திருக்கிறதே! இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

"மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இந்தச் சபை அரசியல் நிர்ணய சபையாக, புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மக்களே கட்டளையிட்டிருக்கிறார்கள்" என்று அவர் தமது பதிலில் கூறினார்.

'ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளதே இதற்குச் சான்று. புதிய அரசியல் அமைப்பு எப்படிப்பட்டது என்றதல்ல, அரசியல் நிர்ணய சபையாக புதிய ஆட்சிமன்றத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் ஆதரவு கொடுத்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

(சி. பி. ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆலயப் பிரவேசத்துக்கு சட்டம் இன்று தெளிவு; யாரும் தயங்க வேண்டியதில்லை"

— கோப்பாய் எம். பி.

யாழ்ப்பாணம், புதன்
மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்னைக்கு எப்படித் தீர்வு காணலாம்?.

இதுபற்றி ஆலோசனை செய்வதற்கு சென்ற திங்கட்கிழமைமாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஒரு விசேஷ மகாநாடு கூட்டியது. அரசியல் கட்சிகளைச்சேர்ந்தவர்கள், கட்சிகளைச் சேராதவர்கள் பலரும்இதில் கலந்துகொண்டு ஆலோசனைகள் கூறினர். தங்கள்கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் எவரையும் குறை கூறுவதற்காக இந்தமகாநாடுகூட்டப்படவில்லை யென்றும் சைவ மக்களின் ஒரு பகுதியினரை ஒதுக்கிவைத்துச் செய்யப்படும் அநீதியை நீக்கி நியாயத்தைப் பெறுவதற்கு ஒத்துழைப்பையும்உதவியையும்தக்க ஆலோசனையையும் பெறுவதற்காகவே இந்த மகாநாடு கூட்டப்பட்டதென்றார். ஆலயப்பிரவேசப் பிரச்னையைத் தமிழ் மக்களின்பிரச்னை யெனக் கருதி, சுமுகமான முறையில் தீர்க்க முன்வர வேண்டுமென்று திரு. நாகரத்தினம் கேட்டுக் கொண்டார். ஆலயக்கதவுகளைத் திறக்க வைப்போம்என்றநம்பிக்கை தங்களுக்கு உண்டு என்றும் அவர் சொன்னார்

திரு. செல்வராஜா பேசுகையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முயற்சியைப் பின்தள்ளக்கூடிய முறையில் சிலர் முயற்சி செய்வதாகச் சொன்னார்,

திரு கே டானியல் பேசுகையில் பலாத்காரமாக ஆலயத்துள் செல்ல முயற்சிப்பதை எதிர்ப்பதாகச் சிலர் கூறுகின்றனர் யார் பலாத்காரம் செய்கின்றனர்? ஆண்டவனை வழிபடச் செல்பவர்கள் பலாத்காரம் செய்கின்றனரா? வழிபடச் செல்வோரை வாசலில் நின்று தடுத்து நிறுத்துவோர் பலாத்காரம் செய்கின்றனரா? என்று கேட்டார்.

என்ஜினியர் இ. வைத்திலிங்கம் பேசுகையில் சைவ மக்களில் ஒரு பகுதியினரை ஆலயத்துட்செல்ல விடாமல் தடுப்பது பெரும் அநீதியென்றும் இந்த அநீதி இன்னும் அதிக நாளைக்கு நீடிக்க முடியாதென்றும் கூறினார்.

கோப்பாய் ஆட்சிமன்றப் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பொது மக்கள் இயக்கமாக மாறிவிட்டதென்றும் இந்த இயக்கத்தின் துணிகர முயற்சியைப் பாராட்டுவதாகவும் கூறினார். தீண்டாமையை ஒழிப்பதற்கு மக்கள் மத்தியில் ஆதரவு அதிகரித்துள்ளதென்று கூறிய திரு. கதிரவேலுப்பிள்ளை 80. 85 சதவிகித மக்கள் தீண்டாமையை ஒழிப்பதற்கு ஆதரவாகவுள்ளனரென்றும் சென்ற பொதுத்தேர்தல் முடிவு இதையே காட்டுகிறதென்றும் சொன்னார். மாவிட்டபுரம் கோயில் எவ்வித பாகுபாடுமின்றி சகலருக்கும் திறந்துவிடப்பட வேண்டுமென்பதில் தமிழ் மக்களின் ஆதரவு நிறைய உண்டு: தமிழ் மக்களின் மதிப்பைப் பெற்றுள்ள தமிழ் அரசுக்கட்சியின் ஆதரவு இதற்கு முழுக்க முழுக்க உண்டு என்றும் அவர் கூறினார்.

"சமயத்தின் உண்மைகளை உணர வேண்டும் ஒன்றேகுலம் இதுதான் சைவசமயத்தின் தத்துவம். திருமந்திரத்தைச் சொன்ன திருமூலர் தான் இதைச் சொன்னார். திருமூலர் சொன்னது, திரு[illegible]வர் சொன்னது தான் ஆகமம் திரு. சுந்தரலிங்கமும்குருக்களும்சொல்வதல்ல ஆகமம்'' என்று திரு. கதிரவேலுப்பிள்ளை சொன்னார் சென்ற முறை ஆலயப்[illegible]வேச முயற்சியில் கண்[illegible]யத்

திரு. சின்னையாவை மாவிட்டபுரம் ஆலயத்துள் சென்று வணங்குவதற்குத் திரு. சுந்தரலிங்கம்மோ மாவிட்டபுரம் குருக்களோ தடைசெய்ய முடியாது. இது நீதிமன்றத்தின் உத்தரவு இதே போல் என்ஜினியர் வைத்திலிங்கம், திரு எம். பூபாலசிங்கம் போன்றோரும் உள்ளேசென்று வணங்குவதற்குத் தடைசெய்ய முடியாது. இது தனிப்பட்ட முறையில் சென்றமுறை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளினால் அளிக்கப்பட்ட தீர்ப்பு. இம்முறை 8ந் திகதி மாவிட்டபுரம் ஆலயம் சகலருக்கும் திறந்து விடப்படாவிடில் தனிப்பட்ட முறையில் அல்லாமல் பொதுவாக சகலருக்கும் ஆலயத்தைத் திறந்து விட வேண்டுமெனக் கோரி வழக்குத்தாக்கல் செய்ய ஆலோசனை செய்து வருகிறோம். இப்போதுள்ள தர்மகர்த்தாவை நீக்கி வேறு தர்மகர்த்தாவை நியமிக்க வேண்டுமெனக்கோரியும் வழக்குத்தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளோம்' என்று திரு.கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

சட்டமும் அரசாங்கமும் ஆலயப்பிரவேசத்துக்கு அனுசரணையாக இருந்தாலும் மற்றவர்கள் உரிமையைத் தருவார்கள் என்று இராமல் போராடிப் பெறவேண்டியது உங்கள் கடமை என்றும் அவர் சொன்னார்.

நேரடி நடவடிக்கைதான் உணராதவர்களை உணரச் செய்ய வைக்கும் என்று கூறிய திரு கதிரவேலுப்பிள்ளை இப்பிரச்னைக்கு எல்லோரும் எல்லாவழிகளிலும் முயற்சிசெய்யவேண்டுமென்றார்.

அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. எம். நடராசா பேசுகையில் இந்தப் பிரச்னையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னர் அழைக்கப்படவில்லை. இப்போது அழைக்கப்பட்டிருக்கிறது. ஆலயப் பிரவேசத்திற்கு நாங்கள் முன்னின்று போராடுவோம்' என்றார். சென்ற முறை பொலிசார் சரியாக நடந்து கொள்ளவில்லையென்றும் அவர் குறை கூறினார்.

திரு. குமாரலிங்கம் பேசுகையில் சட்டத்தை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோசனமில்லையென்றார் 8-ம் திகதி மாவை ஆலயப் பிரவேசம் நடந்தே தீரும் என்று அவர் சொன்னார்.

திரு வி ஏ. கந்தசாமி பேசுகையில் 1966-ம் ஆண்டுக்கு முன்னிருந்த நிலை என்று சொல்லி முன்னேற்றத்தைப் பின்தள்ளப்பார்க்கிறார்களென்றும் ஆலயப் பிரவேசம் நடந்தே தீருமென்றும் கூறினார்.

மகாநாட்டில் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

---

# தேவை

## கணக்கு இலிகிதர்

தராதரங்கள்: G. C. E. (சாதாரணம்) ஆங்கிலம், கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி— வயது 25 முதல் 35வரை கணக்கீடுவேலைகளில் குறைந்தது 2 வருட அனுபவம்- தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளில் அனுபவம் மேலதிக தராதரமாகக் கணிக்கப்படும். மாதாந்த வேதனம் சகல படிகளுமுட்பட ரூபா 150/-.

## தட்டச்சு இலிகிதர்

தராதரங்கள்: G. C. E. (சாதாரணம்) ஆங்கிலம், கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. வயது 25 முதல் 35 வரை. தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளில் குறைந்தது 2 வருட அனுபவம். கணக்கீடு வேலைகளில் அனுபவம் மேலதிக தராதரமாகக் கணிக்கப்படும்.

மாதாந்த வேதனம் சகல படிகளுமுட்பட ரூபா 125/-.

விண்ணப்ப முடிவு திகதி 15-7-1970.

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று
ப. நோ. கூ. ச. சமாசம்.
பண்டத்தரிப்பு.

2346

# பொது வைத்தியத் தாதிகள் பதவி

(தற்காலிகம்)

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மேற்படி தற்காலிக பதவிக்கு ஓய்வு பெற்ற அரசாங்க வைத்தியத் தாதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் அனுப்பும் விண்ணப்பத்தில் தமது வயது, தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

திரும்பவும் வேலைக்கமர்த்தப்பட்ட பென்சனியர்களுக்குரிய சட்டங்கள் விதிகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும், மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என்ற விலாசமிடப்பட்டு 20-7-70 ந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-7-70. 2351

## கூட்டுறவு தினவிழா

பண்டத்தரிப்பு.புதன்
இளவாலை கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவாளர் தினவிழா நாளை 9-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இளவாலை மகாவித்தியாலய திறந்தவெளியரங்கில் இவ்விழா நடைபெறவிருக்கிறது. நாடகம் பாட்டுபேச்சு மற்றும்கூட்டுறவு சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

கண்டல்வெளியில்

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்
அடம்பன் காரியாதிகாரி பிரிவினுல் கண்டல்வெளியில், இம்மாதம் 11-ம்திகதி ''விளையாட்டு விழா'' ஒன்று நடைபெறஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், மென்பந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மெய்வல்லுனர் போட்டி ஆகியன நடைபெறவிருக்கின்றன.

அடம்பன் காரியாதிகாரி பிரிவின் விளையாட்டு உத்தியோகஸ்தரான திரு.எம்.டி. தம்பிராசா, இவ்விளையாட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றார். (தே நி.)

## விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், செவ்வாய்
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு பி.எஸ். குமாரசாமி கலந்து கொண்டார். பச்சை இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. பரிசளிப்பு விழாவுக்குக்கல்லூரி அதிபர் எஸ். சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

## யாழ். கிளை

யாழ்ப்பாணம், புதன்
இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளன யாழ். பிரதிநிதி திரு எஸ். நடராசா தலைமையில் கொட்டடியிலுள்ள சம்மேளனக் காரியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது,

இ. போ. ச. தொழிலாளர் கமிட்டியின் விரிவான செயல் திட்டங்கள்பற்றி தாய்ச்சங்கப் பிரதிநிதி திரு டக்ளஸ் [illegible] விளக்கிப் பேசினார் இ.போ.ச ஊழியர் சங்க

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 8—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
மாவீரன் ஜெயசீலன்
(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த
இரு கோடுகள்

14-ம் திகதி இறுதிப்போட்டி

# சாம்பியன் கிண்ணம் யாருக்கு?

## தபால் மாநகரசபைக் கோஷ்டிகள் பயிற்சியில் தீவிரம்

யாழ்ப்பாணம், புதன்
யா. மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம், இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இந்த இறுதியாட்டத்தில் 'யாழ். தபால் கோஷ்டி'யும், 'யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டி'யும் கலந்து கொள்ளுகின்றன.

இங்கள் சுற்றுப் போட்டி[illegible]

### தபால் கோஷ்டி

இம்முறை தபால் கோஷ்டிக்கு வீரர் எஸ். எஸ். சண்முகநாதன் தலைமை தாங்குகின்றார். இவர் இக்கோஷ்டியில் கடந்த ஏழு வருடங்களாக அங்கம் வகித்து வருகிறார். பின்னணியில் நின்று விளையாடுவதில் சிறந்தவர்.

வி. குசைப்பிள்ளை, இவரின் பெயரை கேள்விப்பட்டதும் எதிர்க் கோஷ்டியினரின் மனதில் சற்று[illegible]ப்பு. இம்முறை தலைமை தாங்குகின்றார். இவர் இக்கோஷ்டியில் பலவருடங்களாக தொடர்ந்து விளையாடும் ஒரு அனுபவம் வாய்ந்த வீரர், பின்னணியில் நின்று விளையாடுவதில் மிகவும் வல்லவர்.

பி. அகஸ்ரின்: இவர் இக்கோஷ்டிக்கு புதியவராக இருந்த போதிலும், யாழ். தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்த அனுபவம்

# வரி விளம்பரம்

## தேவை

திறமை வாய்ந்த பெண் கன்வெஸர்கள் தேவை திறமைக்கேற்ப சமிஷன் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். மனேஜர். M. S. T. (சங்கரப்பிள்ளை கட்டிடம்), 95/3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் 3148

## விற்பனைக்கு

வீடு:
யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கை வண்ணார்பண்ணையில் 2 பரப்பு 14 குழி காணியும் வீடும் மின்சாரம் உட்பட சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: சி. செல்லையா புறக்ரர், கலாஞ்சலி, கரவெட்டி. 3161

காணி:
கிளிநொச்சி பாஸ்கரலிங்கம்ஸ் கட்டிடத்திற்கு கிழக்குப் பக்கத்திலும், கண்டி வீதிக்கு அருகாமையிலுமுள்ள ஒரு ஏக்கர் வயற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. சிதம்பரநாதன் ஆசிரியர், துன்னாலை தெற்கு, கரவெட்டி. 3159

லொறி:
22 ஸ்ரீ 5000 தொடர் பிலக்க ஒஸ்ரின் டீசல் 3 1/2—5 தொன் லொறி நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். விபரங்களுக்கு: S. துரைசிங்கம், 10/2, முத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3160

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த

## இரு கோடுகள்

இன்றுமட்டும்
வின்ஸர் ரவிச்சந்திரன் - சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நாகேஷ், பாலையா
தினசரி 4 காட்சிகள் நடித்த

## ஓடும் நதி


நாளை முதல் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் — பத்மினி
நடித்த

## திருமால் பெருமை

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

## எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
## நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடித்த




## கூட்டுத்தாபனம்

**புதன் 8—7—70**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 வீணை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ அன்ட் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-00 லயவின்யாசம், 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 நேயர் கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.


**REGAL JAFFNA**
Daily 4-45, 7 & 9-45 P.M.
Marlon Brando, Sophia Loren
in
COUNTESS FROM HONG KONG

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
**பணக்கார பிள்ளை**
(புதிய வெளியீடு!)

**MANOHARA JAFFNA**
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya-Prepoya 10-30 a.m.
Tony Cortis,
Monica Vitti in
THE CHASTITY BELT
(Techni Color)
(Adults Only)

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஆர் ராதா — பத்மினி
நடித்த
**சித்தி**


இ. போ. ச. தொழிலாளர் கமிட்டியின் விரிவான செயல் திட்டங்கள்பற்றி தாய்ச்சங்கப் பிரதிநிதி திரு டக்ளஸ் ஆர். டி. சில்வா விளக்கிப் பேசினார்.

இ.போ.ச ஊழியர் சங்க யாழ் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் கே, இரத்தினம், உபதலைவர்கள் ஜி. பிரான்சிஸ், எஸ். சற்குணராசா, காரியதரிசி: கே. தனபாலசிங்கம். உபகாரியதரிசி பி. தனபாலசிங்கம், தனாதிகாரி எஸ். குமாரசாமி, உப தனாதிகாரி கே. தனபாலசிங்கம்.

நிர்வாகக்குழு அங்கத்தவர்கள்: பொறியியல்பகுதி- என். ஐயாத்துரை, எஸ். சிவபாதம்.

செயல்முறைப்பகுதி என். மகாலிங்கம், ஜே, பிலிப்.

காரைநகர் செயல்முறைப் பகுதி எஸ், வீரசிங்கம், எஸ். தில்லைநாதன்,

நிர்வாகப்பகுதி எம். மாசிலாமணி, வி. பராக்கிரமசிங்கம்.

இ.போ.ச, பிரதமகமிட்டி ஜி. பிரான்சிஸ், கே. இரத்தினம்.

இ. போ ச. உப கமிட்டி எம். மாசிலாமணி, கே. தனபாலசிங்கம், எஸ். சற்குணராஜா.

... சொன்னது தான் ஆகமம் திரு. சுந்தரலிங்கமும்குருக்களும்சொல்வதல்ல ஆகமம்'' என்று திரு. கதிரவேலுப்பிள்ளை சொன்னார் சென்றமுறை ஆலயப்பிரவேச முயற்சியில் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டதற்காக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரை அவர் பாராட்டினார். பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் பலாத்காரமில்லாமல் நடந்து கொண்டது மெச்சத்தக்கது என்று கூறிய திரு. கதிரவேலுப்பிள்ளை ஓர் இயக்கம் ஒரு கால வரையுடன் நிற்பதல்ல என்றும் சொன்னார்.

சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் பற்றியும் அந்தச் சட்டத்தின் துணையுடன் நடைபெற்ற ஆலயப் பிரவேச வழக்குகள் ஈட்டிக் கொடுத்த வெற்றிகள் பற்றியும் விரிவாக விளக்கிக் கூறிய திரு. கதிரவேலுப்பிள்ளை சென்றமுறை அரசாங்கத்துக்கும் பொலிசாருக்கும் தெளிவில்லாமல் தயக்கத்தைக் கொடுத்த இச் சட்டம் இப்போது நீதிமன்றம் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்களிலிருந்து மிகத் தெளிவாகியிருக்கிறதென்று சொன்னார்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி**

**10—7—70 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி**

பிரதம விருந்தினர்:

**திரு. V. சுப்பிரமணியம்**

(ஓய்வு பெற்ற தொழிற்பகுதி உதவி ஆணையாளர்)

**திருமதி சுப்பிரமணியம்**

பரிசில்களை வழங்குவார்.

பெற்றோர், பழைய மாணவர், அன்பர்கள்
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

2350 அதிபர்.

யாட்டம், இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இந்த இறுதியாட்டத்தில் 'யாழ். தபால் கோஷ்டி'யும், 'யாழ்ப்பாண மாநகரசபைக் கோஷ்டி'யும் கலந்து கொள்ளுகின்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் தபால்கோஷ்டி தனது பிரிவில் மற்றையக் கோஷ்டிகளை மிக இலகுவாக வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு விளையாடுவதற்கு தகுதி பெற்றது. யாழ் மாநகரசபைக் கோஷ்டி தனது பிரிவில் எல்லாக் கோஷ்டிகளையும் வெற்றி பெற்ற போதிலும், காங்கேசன்துறை சிமெந்துக் கோஷ்டியுடன் மோதிய இரு ஆட்டங்களும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது இவ்விரு கோஷ்டியினரும் முதலில் போட்டியிட்ட போது ஆட்டம் சமமாக முடிவடைந்ததினால், இவர்கள் மீண்டும் போட்டியிட்டனர் இந்தப் போட்டியில் மாநகரசபைக் கோஷ்டியினர் மிகவும் சிறப்பாக விளையாடி, சிமெந்துக் கோஷ்டியை வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு விளையாடுவதற்குத் தகுதி பெற்றது.

கடந்த பல வருடங்களாக, தபால் கோஷ்டியினரே இந்தச் சுற்றுப் போட்டியின் வெள்ளிக் கிண்ணத்தை தமது வசமாக்கிக் கொண்டு வந்திருக்கிறது.

மாநகரசபைக் கோஷ்டியினர் கடந்த மூன்று வருடங்களின் பின், இம்முறைதான் இந்தச் சுற்றுப் போட்டியில், இறுதியாட்டத்துக்கு விளையாட முன்வந்திருக்கின்றது. மாநகரசபைக் கோஷ்டியினர் இம்முறை எப்படியாவது 'சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தை' கைப்பற்றி தீரும் நோக்கோடு, தற்போது கடும் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றது.

யில் கடந்த ஏழு வருடங்களாக அங்கம் வகித்து வருகிறார். பின்னணியில் நின்று விளையாடுவதில் சிறந்தவர்.

வி. குசைப்பிள்ளை: இவரின் பெயரை கேள்விப்பட்டதும் எதிர்க் கோஷ்டியினரின் மனதில் சற்று திகில் ஏற்பட்டுவிடும். மிகச் சாதுரியமாக பந்தைக் கொண்டுவரும் எதிர்க் கோஷ்டியினரின் முன்னணி வீரர்களை, மிக இலகுவாக ஏமாற்றி பந்தைப் பறித்துத் தமது வீரர்களிடம் கொடுக்கக் கூடியவர். இவர் இக் கோஷ்டியில் கடந்த பத்து வருடங்களாக அங்கம் வகித்துவரும், ஒரு சிறந்த பின்னணி வீரர். யாழ். தெரிவுக் கோஷ்டியிலும் பலவருடங்கள் அங்கம் வகித்தவர்.

தபால் கோஷ்டியின் முன்னணி வீரர்களான எம். சந்தியா, எஸ். எம். புலேந்திரன் ஆகிய இருவரும் இக் கோஷ்டியின் உயிர் நாடியாக இருந்து வருகின்றனர். இவர்கள் இருவரும் கோல்கள் போடுவதில் மிகவும் சாமார்த்திய பேர்வழிகள். ஆட்ட நேரத்தின் போது. எதிர்க் கோஷ்டியினரால் மிகவும் உன்னிப்பாக, இவ்விருவருமே கண்காணிக்கப் பட்டு வருவார்கள். எம். சந்தியா எட்டு வருடங்களாகவும், எஸ். எம். புலேந்திரன் ஏழு வருடங்களாகவும் தமது கோஷ்டியில் தொடர்ந்து அங்கம் வகித்து வருகின்றனர்.

மற்றும் இக் கோஷ்டியில் எஸ். குமாரசாமி (கோல் காப்பு வீரர்), எஸ். தர்மலிங்கம், வி. தம்பித்துரை, ரி. தம்பித்துரை, எஸ். தியாகலிங்கம், டி அன்ரன், எஸ். சிவஞானம், என். பரமேஸ்வரலிங்கம் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

### மாநகரசபைக் கோஷ்டி

யாழ். மாநகரசபைக் கோஷ்டிக்கு வீரர் ஜி. அருள

நின்று விளையாடுவதில் மிகவும் வல்லவர்,

பி. அகஸ்ரின்: இவர் இக் கோஷ்டிக்கு புதியவராக இருந்த போதிலும், யாழ். தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்த அனுபவம் வாய்ந்த மத்திய முன்னணி வீரர். ஆட்ட நேரத்தின் போது எதிர்க் கோஷ்டியினர் இவரை மிகவும் நிதானமாகக் கண்காணித்து வருகின்ற போதிலும், அவர்களின் கண்களில் மண்ணை தூவி கோல்களை அடுத்தடுத்து மின்னல் வேகத்தில் போடுவதில் தீரர். இவர் தான் இக்கோஷ்டியின் 'உயிர்நாடி'

பி. இம்மனுவேல்: இக் கோஷ்டியில் பல வருடங்களாகத் தொடர்ந்து விளையாடும் வீரர். பின்னணியில் நின்று பந்தை தடுத்து தமது கோஷ்டியினரை இலகுவாக விளையாடச் செய்வதில் வல்லவர்.

ரி. அன்ரனி, ஜே, ஏ. அகஸ்ரின் இவ்விருவரும், மைதானத்தில் எப்பகுதியிலும் நின்று விளையாடக் கூடியவர்கள். யாழ். தெரிவுக் கோஷ்டியில் பின்னணியில் நின்று விளையாடி புகழ் பெற்ற அன்ரனி, இக்கோஷ்டியில் பின்னணியிலும், முன்னணியிலும் நின்று விளையாடும் திறமைவாய்ந்த வீரர்.

எம். டி. கோமேந்திரன்:- யாழ். தெரிவுக் கோஷ்டியில் அங்கம்வகித்த சிறந்தகோல் காப்புவீரர். மின்னல்வேகத்தில் வரும் பந்தை, மிக சாதுரியமாக பாய்ந்து தடுப்பதில் வீரர்.

(4-ம் பக்கம்பார்க்க)


**தேவை**

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை. பணம் உடனே கொடுப்போம் எழுதுங்கள். வெஸ்டன் றேட்ஸ், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம்.
3145

6½ ஹோஸ் பவர் தொடக்கம் 20 ஹோஸ் பவர் வரையுமுள்ள
**ஜோன்சன்** அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்
**பேக்கின் B 3** மரீன் இன்ஜின் உதிரிப்பாகங்களும்
எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்
மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**விஷ்ணு ஹாட் வெயார்ஸ்ரோஸ்**

57, யாழ்ப்பாணம் வீதி (போன்: 34) வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் நிபுணர் உதவியுடன் விமான எதிர்ப்பு ஏவாயுதக் கருவிகளை ஒரே இரவில் எகிப்தியர் அமைத்தனராம்

## இஸ்ரேலிய ராணுவத்தளபதி வெளியிடும் தகவல்

டெல்அவில், ஜுலை 7

விமானத் தாக்குதல்களுக்கு சவால்விடும் சக்திமிக்க ஏவாயுதக் கருவிகளை எகிப்தியர் சூயஸ்கால்வாய்க் கரையில் சோவியத் உதவியுடன் நிறுவியிருப்பதாக இஸ்ரேலிய ராணுவத்தளபதி கூறியிருக்கிறார்.

இந்த ஏவாயுதங்களை ஒரே இரவில் எகிப்தியர் நிறுவினுர்கள் என்றும் சில தினங்களுக்குமுன் இஸ்ரேலியர்நடத்தியவிமானத்தாக்குதலின்போது இவைகளைப் பயன்படுத்தி எகிப்தியர் மூன்று இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டார்கள் என்று இஸ்ரேலிய ராணுவத்தளபதி கூறியிருக்கிறார்.

இந்த ஏவாயுதக்கருவிகளை சோவியத் நிபுணர்களின் உதவியுடன் நிறுவியதுமட்டுமன்றி இந்தக்கருவிகளை இயக்குவதற்கும் சோவியத் நிபுணர்கள் உதவி பெறப்பட்டுள்ளதாம். இஸ்ரேலிய விமானங்களைத் தாக்குவதற்கான இருகருவிகளை சோவியத் நிபுணர்களே இயக்கியதாகவும் வேறு இரண்டை சோவியத் நிபுணர்களின் மேற்பார்வையில் எகிப்தியர்கள் இயக்கியதாகவும் இஸ்ரேலிய தளபதி கூறுகிறுர்.

இந்தக்கருவிகள் நிறுவப்பட்டுவிட்டதால் விமானப் போர்த்துறையில் இஸ்ரேலியர் வகித்துவரும் மேலான நிலை மாறிவிடவில்லையென்றும் இஸ்ரேலிய தளபதி தெரிவித்திருக்கிறுர்.

இஸ்ரேலியரின் இந்தக் கூற்றை ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் மறுத்திருக்கின்றனர். எகிப்திய ராணுவமுகாம்களில் சோவியத் அதிகாரிகள் வேலைசெய்கிறுர்களென்பதை அவர்கள் மறுத்துள்ளனர்.

# பிரிந்து சென்றவர்களின் கட்சி உண்மைக் காங்கிரஸ் அல்ல

## மொரார்ஜி கூற்று

புதுடில்லி, ஜுலை 7

"தற்போது பிரதம மந்திரி தலைமையில் நடைபெறும் கட்சி காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்றவர்களின் கட்சி அது உண்மையானகாங்கிரஸ்கட்சிஅல்ல"

இவ்வாறு காங்கிரஸ் தேர்தல் சின்ன வழக்கில் சாட்சியமளித்தபழையகாங்கிரஸ் தலைவரும், முன்னுள் நிதி மந்திரியுமான திரு. மொராஜிதேசாய் கூறினுர்.

காங்கிரஸ் பிளவுபடுவதற்கு முன்னுல் ஆகஸ்ட் மாதம்காரியக்கமிட்டி நிறைவேற்றிய "ஐக்கிய" தீர்மானம்வெறும் சொற்புரட்டு என்றும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

ஆரம்ப அங்கத்தினராக இருப்பதிலிருந்து விலக்கப் ...

இந்திரா காந்தியின் நடவடிக்கை போல் இந்தியாவின் வரலாற்றிலோ அல்லது உலக வரலாற்றிலோ எதுவும் நடந்ததில்லை யென்று கூறினுர்.

## 'இனிமேல் தான் அரசுக்கு வேலை இருக்கிறது'

மீகம, செவ்வாய்

இந்த அரசாங்கம் எந்த சமயத்துக்கும் விரோதமாக நடக்காது என்றும், கோவில்களை உடைத்துநொறுக்காது என்றும் கட்டானை தொகுதி புதிய எம். பி. திரு. கே. சி. டி. சில்வா கூறினுர்.

கட்டுநாயக்க இளைஞர் சங்கத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அவர் பேசினுர்.

புதிய அரசுக்கு இனிமேல் தான் வேலையிருக்கின்றது. உலகத்தில் உள்ள ...

எதிர்காலத்திலும் நீடிக்க வேண்டும். அரசியலில் ஜாதி, சமயம், இன பேதங்கள் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனுல் அந்த வகையில் கட்டானதொகுதி முழுநாட்டுக்குமே எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினுர்.

— —

## 11 பேர் பலி

பம்பாய், ஜுலை 7

## பிறவிக்குருடர் நடத்தும் மொழி ஆராய்ச்சி

சிதம்பரம், ஜுலை 7

'பிரெய்லி' எழுத்து மூலம் கல்வி பயின்ற எம். ஏ. பட்டதாரியும் பிறவிக்குருடருமான திரு. எவ் எஸ். அப்துல் சலாம் மொழி ஆராய்ச்சி நடாத்துவதற்காக அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்திருக்கிறுர். இவர் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த முதலாவது குருட்டு ஆராய்ச்சி மாணவனுகும்.

## நாயைப் பழக்கியதின் பலன்

அல்டர்ஷாட், (இங்கிலாந்து), ஜுலை 7

தென்இங்கிலாந்தில்உள்ள அல்டர்ஷாட் நகரில் உள்ள மைக்கல் வார்மேன் என்னும் விவசாயி தான் வீசி எறியும் பொருட்களை திரும்ப எடுத்துக்கொண்டு வருவதற்கு தனது நாயைப் பழக்கினுர்.

ஆனுல் வெடிக்காத எறிகுண்டு ஒன்றை அந்நாய் ஒருநாள் தூக்கிக்கொண்டு வரும் என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை:

திரு.வார்மேன் தமது டிராக்டரில் வேலைசெய்துகொண்டிருந்த போது வெடிக்காத எறிகுண்டு ஒன்றைக் கண்டார்.

உடனே அவர் பொலிசாருக்குத்தகவல் கொடுத்தார் அங்குவந்த ஒரு பொலிஸ்காரர் அந்த குறி குண்டை ஒரு வயலுக்குள் வீசி எறிந்ததும் இருவரும் டாது காட[illegible] நாடி ஓடினர்.

அவர் திரும்பிப் பார்த்த போது பிளங்கெட் என்னும் அந்த நாய் எறிகுண்டை கெளவிக்கொண்டு [illegible] தைக் [illegible]

உட[illegible] அவர்கள்பயந்து ...

## எழுத்தாளர் அழகிரிசாமி காலமானுர்

சென்னை, ஜுலை 7

பிரபல எழுத்தாளரும் பத்திரிகை ஆசிரியருமான திரு.கு. அழகிரிசாமி நேற்று முன்தினம் சென்னை பெரியாஸ்பத்திரியில் காலமானுர்.

இவர் கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் நேசன் பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்தபின் சென்னையில் வெளியாகும் 'நவசக்தி'யில் செய்தியாசிரியராக பணிபுரிந்தார். 'சோவியத் நாடு' சஞ்சிகையில் ஆசிரியராகவும பணிபுரிந்துள்ளார். இரு மாதங்களுக்கு முன்னர் காசநோய்ச் சிகிச்சைக்காக ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டார்.

## கிருஷ்ணநதி விபத்து

## இறந்தவர் 30 பேர் தானும்

மசூலிப்பட்டினம், ஜுலை 7

கிருஷ்ணநதியில் படகு கவிழ்ந்ததால் மரணமானவர்கள் 30 பேர் வரைதான் இருக்குமாம் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுவிட்டதாக இப்பொழுது செய்தி கிடைத்திருக்கின்றது. இந்த விபத்தில் 150 பேர் வரை பலியாகியிருக்கலாம் என்று முன்னர் அஞ்சப்பட்டது.

— —

## இடமாற்றம்

கோட்டை, செவ்வாய்

இந்தவருட முடிவில் கொழும்பு எச்செலன் சதுக்கத்திலுள்ள பொலிஸ் பயிற்சி கல்லூரிகளுத்துறைக்கு மாற்றப்படவுள்ளது.

# தி. மு. க. மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லா தீர்மானம்

## கருத்திருமன் அறிவிப்பு

திருச்சி, ஜுலை 7

'திராவிட முன்னேற்றக் கழக மந்திரிசபைமீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்போவதாக சட்டசபை காங்கிரஸ் எதிர் கட்சித்தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அரியலூர் பகுதிபழையகாங்கிரஸ் மகாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

இடைத்தேர்தல்களை தி. மு.க. அரசுஒத்திவைத்ததற்குக்காரணமென்ன? கோவை துப்பாக்கிச் சூட்டுக்குப்பின்னர் தேர்தலை நடத்த அரசு பயப்படுகிறது.

தமிழகத்தில் பத்திரிகைகளுக்கு சுதந்திரமில்லை. தி. மு. க. அரசு பத்திரிகைகளை மிரட்டிக் கொண்டிருக்கிறது கோவையில்பத்தாயிரம்விவசாயிகள் கூடி வன்முறையில் இறங்கியதால் தான் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக தி. மு. க. வினர் கூறுகின்றனர்.

இவ்வளவு பேர் அங்குகூடியிருந்தார்கள் என்பதைநிரூபித்தால் நான் அரசியலிலிருந்து விலகத் தயார் என்று திரு. கருத்திருமன் மேலும் பேசுகையில் கூறினுர்.

## காமராஜர் ஆட்சேபம்

திருச்சி, ஜுலை 7

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்ததற்கு காரணம்' திராவிட கழகத் தலைவர் ஈ.வே.ராமசாமி நாயக்கரின் திருமணம்' என்று தமிழ் நாட்டுப் பாடசாலைகளில் ஏழாம் வகுப்புக்கு வைக்கப்பட்டுள்ள ஒரு தமிழ் உபபாடப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது பற்றி அரியலூர் பகுதி பழைய காங்கிரஸ் மாநாட்டில் பேசுகையில், காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

'தேசிய நலனுக்காகவும், தேச முன்னேற்றத்திற்காகவும் கட்சிகள் தோன்றுவது வழக்கம். ஆனுல் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு ...

## இளவாலையில் ஹாட்லி [illegible]ணப் பெண்[illegible]களின் தொண்டு

பண்டத்தரிப்பு, செவ்வாய் பெண்சாரணர்கள் ...

## செய்திச் சுருக்கம்

### புதிய சட்டம்

நடைமுறையில் இருக்கும் குழந்தைகள் இளைஞர் சேமநல சட்டம் இன்றைய பிரச்னைகளைத் தீர்க்கப் போதுமானதல்ல என அரசாங்கம் கருதுவதனுல் புதிய சட்டம் இயற்றுவதென தீர்மானித்துள்ளது. சிறுவர் நன்னடத்தை, பராமரிப்புக் கமிஷனர் திரு. டபிள்யு. ஆர். பி. ராஜகருணு தலைமையிலான குழுவொன்று புதிய சட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

0 0 0

### புதிய நியமனம்

மகாவலி அபிவிருத்திச் சபைக்குப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் நாத் அமரக்கோன், டாக்டர் வீ. ஆர். பானபொக்க, பேராசிரியர் கே. குலரத்தினம், தலைவர்: திரு. எச். டி. எஸ். மனும்பெரி, பிரதிநிதிகளாக திரு எம் எஸ் பெரேரா, திரு கொட்பிறி குணதிலகா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

0 0 0

### நியமனம்

மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபராக திரு. டபிள்யு.ஜே.பெர்ணுண்டோ நியமனம்பெற்றுள்ளார்

### லட்சம் ரூபா சேர்ந்துள்ளது

'நாட்டைக்காக்கும் நிதிக்கு' இதுவரை அரசாங்கத்துக்கு 5லட்சத்து 91 ஆயிரம் ரூபா வசூலாகியுள்ளது. விற்பனவுவரிமூலமும் வருமான வரிமூலமும் பத்துக்கோடி ரூபா வசூலித்துவிடமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரி ரிசேவ் பத்திர மூலம் அரசாங்கம் 4 கோடி 30 லட்சரூபாவை வசூலித்துள்ளது.

0 0 0

### திரைப்படவிழா போட்டி

உள்நாட்டுக் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாக ஆண்டு தோறும் திரைப்படவிழா வொன்றைநடாத்தஅரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதில் சிறந்தநடிகர், நடிகையர், இயக்குநர், கதையமைப்பாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுகௌரவிக்கப்படுவர்.

இத்தகவலை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா வெளியிட்டார்.

ர 0 0

### ரப்பரிலிருந்து தளபாடம்

ரப்பர் மரத்திலிருந்து நீண்டநாள் பாவிக்கக்கூடிய தளபாடங்களைச் செய்ய முடியுமென்று தேசிய சிறுகைத்தொழில் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

0 0 0

### கூட்டுறவு விழா

வவனியா, புதன்

இன்று வவனியா மாவட்டக் கூட்டுறவு சமாஜத்தின் ஆதரவில் கூட்டுறவு விழா நடைபெறும். வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் தேசியக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

—

### சகல வட்டாரங்களிலும் போட்டியிடுவர்

உடுப்பிட்டி, செவ்வாய்

அடுத்தமாதம் 29-ம்திகதி நடைபெறவிருக்கும் நெல்லியடிப் பட்டினசபைத் தேர்தலில் சகல வட்டாரங்களிலும் கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர்களை நிறுத்துவதென்று வடமராட்சிக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதேசக்கிளைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிப் பிரதேசக் கிளைச் செயலாளர் திரு. எஸ். வரப்பிரகாதம் ஆலோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம்காரியக்கமிட்டி நிறைவேற்றிய ''ஐக்கிய'' தீர்மானம்வெறும் சொற்புரட்டு என்றும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

ஆரம்ப அங்கத்தினராக இருப்பதிலிருந்து விலக்கப்பட்டபோதே கட்சித்தலைமையிலிருந்து திருமதி இந்திராகாந்தி ராஜிஞமா செய்திருக்கவேண்டும் மற்ற அங்கத்தினர்களிடம் அவர் பெறும் பான்மை தேட முடியுமாஞல் அவர் பிரதமராகலாம் என்று தனது சாட்சியத்தில் தெரிவித்த மொரார்ஜி தேசாய் திருமதி

கட்டுநாயக்க இளைஞர் சங்கத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அவர் பேசினர்.

புதிய அரசுக்கு இனிமேல் தான் வேலையிருக்கின்றது. உலகத்தில் உள்ள இதர சோஷலிச நாடுகளின் நிலைக்கு நமது நாட்டைக் கொண்டு வரும்வரைக்கும் நமது போராட்டம் ஓயக்கூடாது. லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்ததினல் இந்தத் தொகுதியிலும் வெற்றி பெற்ருேம். இந்த கூட்டு

என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

— —

## 11 பேர் பலி

பம்பாய், ஜூலை 7

பம்பாயில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததின் காரணமாக 11பேர் கொல்லப்பட்டனர். 12 காயமடைந்தனர். மரணமானவர்களில் 7 பேர் குழந்தைகள்.

ஒரு பெரிய மதில் சிறு குடிசைகளின்மீது இடிந்துவிழுந்ததின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது.

அவர் திரும்பிப் பார்த்த போது பிளங்கெட் என்னும் அந்த நாய் எறிகுண்டை கௌவிக்கொண்டு வருவதைக் [illegible]ண்டனர்.

உட[illegible] அவர்கள்பயந்து வேகமாக ஓட ஓட அந்த நாயும் வேகமாக ஓடி வந்தது.

கடைசியில் அந்தக் குண்டை அந்த நாய் கீழே போடுமாறு செய்து மறுபடி அதைஒரு திடலில் பொலிஸ்காரர் வீசினர்,

அப்போது நாயை அந்த விவசாயி பிடித்துக் கொண்டார்.

## இளவாலையில் ஹாட்லி சாரணப் பெண்களின் தொண்டு

பண்டத்தரிப்பு, செவ்வாய்

இளவாலை பெண்கள் மகா வித்தியாலயத்தில் இரண்டு நாட்கள் முகாமிட்டிருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பெண்சாரணர்கள் இங்குள்ள வீடுகளில் சென்று எவ்விதவேதனமுமின்றித் தொண்டுகள் புரிந்தனர்.

வீடுகளை மெழுகியும், விறகு வெட்டிக்கொடுத்தும், தோட்டவேலைகளில் உதவிசெய்தும் அரிசிகுற்றியும் வீட்டுகட்டு வேலைகளில் உதவிசெய்தும் பலதரப்பட்ட சேவைகளில் இவர்கள் ஈடுபட்டனர்.

பின்னர் ராணுவ நிபுணர்கள் வந்து வெடி குண்டை எடுத்துச் சென்றனர்.

'தேசிய நலனுக்காகவும், தேச முன்னேற்றத்திற்காகவும் கட்சிகள் தோன்றுவது வழக்கம். ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு ஒரு திருமணம் காரணம் என்பதைப் படித்தபோது' நான் வியப்படைந்தேன் என்று அவர் மேலும் பேசுகையில் கூறினர்.


முன்னள் ஆட்சி மன்ற உறுப்பினர் திருக்குறள் முனுசாமி பேசும்போது, 'திருமணங்களின்விளைவாகக் குழந்தைகள் பிறப்பது உண்டு. ஆனல் தமிழ் நாட்டில் திருமணத்தின் விளை

வாக அரசியல் கட்சி கூடப் பிறந்திருக்கிறதே' என்று கூறினர்.

தமிழ் நாட்டில் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த நலனுக்காகவே வேலை செய்து கொண்டிருக்கிருர்' என்று திரு. சுவாமிநாதன் கூறினர்.

கிளைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிப் பிரதேசக் கிளைச் செயலாளர் திரு. எஸ். வரப்பிரகாதம் ஆலோசனைக் கூட்டத்தில் விளக்கினர்.

# உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

**பீ எச் சி**

நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு பீ எச் சி 10% தூள் சிறந்தது. பீ எச் சி 6% துணுக்குகளும், பீ எச் சி 20%.ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.





**களைக்கொல்லி 'M-50'**

'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக்'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.




**சுமித்தியன்**

ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது.



**'என்ட்ரெக்ஸ்' 20**

இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.



**களைக்கொல்லி 'D'**

3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.



**'அசொட்றின்' 60**

ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.



**களைக்கொல்லி 'P-20'**

ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளை சகல தாவரங்களைதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத்தலைத்தடுக்க இம்முறை உகந்தது.




**'ஸ்டாம்' எப்-34**

7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டிபிஏ சேர்வையாகும்.




## வங்கிகம் இலங்கை லிமிட்டெட்

செலின்கோ ஹவுஸ் த.பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

இரசாயனங்களை நினையுங்கள். லங்கெம்மை நினையுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மற்றவர்கள்மீது சந்தேகிப்பதைக் கைவிட வேண்டும் கோபத்தையும் முற்றிலும் கட்டுப் படுத்தவேண்டும். மனதை வென்று எல்லா நிலைமையிலும் நிதானத்துடன் இருப்பவருக்கே வெற்றி கிடைக்கும். ஒருவருக்குள் கடவுள் இருப்பதை நினைவுகூர்ந்தால அவரை சந்தேகிக்க மாட்டோம். இதற்கு தெய்வ நினைப்பு விடாமல் தொடர்ந்து இருத்தல் அவசியம்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
... 49, Jaffna Telephone 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம்
24-ந்திகதி (8-7-70)

# வெளியுறவும் வர்த்தகமும்

வெளி நாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்கள் சம்பந்தமாகபெரும் மாறுதல்களைச் செய்வதற்கு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தீர்மானித்திருக்கிறரென்றும் இத் தீர்மானத்திற்கிணங்க பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு தயாரித்துள்ள திட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக கனாவிலும் ஆர்ஜன்டைனாவிலுமுள்ள தூதரகங்கள் மூடப்படவிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்கள் சம்பந்தமாக மாற்றம் செய்யப்படவேண்டுமென்பதை சில வருடங்களுக்கு முன்னர் இப் பத்தியில் நாம் எடுத்துக் கூறியிருந்தோம். இப்போதாவது இது செயல்படவிருப்பது மகிழ்ச்சிக்குரியதே!

ஆர்ஜென்டைனாவிலும் கானாவிலுமுள்ள தூதரகங்களை மட்டுமல்ல பயனற்ற இடங்களிலுள்ள தூதரகங்களையும் எதுவித தயக்கமுமின்றி மூடிவிட வேண்டும். தூதரகங்களை மூடி விடுவதால் இலங்கைக்கும் அந்த நாடுகளுக்குமிடையேயுள்ள உறவு முறிந்துவிடாது இலங்கையைப் பொறுத்தவரையில் எந்த நாட்டுடனும் அதற்குப் பகைமையில்லை. எந்த நாட்டுடனும் நட்புறவுடன் இருக்கிறதென்பதை உணர்த்துவதற்குத் தூதரகங்களை வைத்திருப்பதுதான் சான்று என்று சொல்லமுடியாது தூதரகங்களில்லாமலே சில நாடுகளுடனும் நட்புறவு வைத்திருக்க முடியும்.

வெளி நாடுகளிலுள்ள தூதரகங்கள் பலவற்றினால் பெருந்தொகைப்பணம் வீணாகச் செலவாகின்றது, தூதரகங்கள் இருக்கும் நாடுகளாம். இலங்கையைப் பொறுத்தவரையில் எந்த நாட்டிடமிருந்தும் ஆயுத உதவி பெறவேண்டிய அவசியமில்லை அந்நியரின் படையெடுப்புப் பயமோ ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலோ நமக்கு இல்லை. நமது விளைபொருள்களையும் உற்பத்திப் பொருள்களையும் வெளிநாடுகளில்விற்பதற்கும் நமக்குத் தேவையான பொருள்களை குறைந்த மலிவான விலைகளில் வெளிநாடுகளிலிருந்துபெறுவதற்கும் நமது தூதரகங்கள் பணிபுரிய வேண்டும். வல்லரசு நாடுகளில் உற்பத்திச் செலவு அதிகம். இதனால் அந்த நாடுகளிலிருந்து வாங்கும் பொருள்களுக்கும் அதிக பணம் கொடுக்க வேண்டியேற்படுகிறது. பொருள்கள் வாங்குவதற்கும் நாட்டின் நிதிநிலைமையைச் சமாளிப்பதற்கும் வல்லரசு நாடுகளிடமே உதவி என்ற பெயரில் கடன் வாங்கவும் நேரிடுகிறது இதன்விளைவாக அந்த நாட்டு மக்களுக்கும் கடமைப்படவும் ஏற்படுகிறது.

வளர்ந்துவரும் சிறிய நாடுகளுடன் ராஜீயத் தொடர்பை ஏற்படுத்தி அங்கு தூதரகங்களை நிறுவினால் நமது பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து நமக்குத் தேவையான வற்றைச் சுலபமான முறையில் அவர்களிடமிருந்து பெறலாம் அயல் நாடான இந்தியா, தென் அமெரிக்க நாடுகளுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ராஜீய உறவு கொண்டு தூதரகங்களைத் திறந்திருப்பதும் அந்த நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சமீபத்தில் சென்று திரும்பியதும் வெளிநாட்டு உறவிலும் வர்த்தகத் தொடர்பிலும் நல்ல வெற்றியளித்திருக்கிறதென்றே சொல்ல வேண்

## செனட்டில் நீதியமைச்சருக்கு திரு' பதில் - 5

# நாம் சமஷ்டி கோருவது ஏன்?

1948-ம் ஆண்டு சமஷ்டிக் கட்சி அமைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அது தமிழ்மக்களது அரசியல், மொழி உரிமைகளுக்காகப் போராடி வருகிறது. நாங்கள் தேர்தலில் போட்டியிட்டோம்; பல எதிர்ப்புகளைக்காட்டினேம், சத்தியாக்கிரகம் செய்தோம் எங்கள் தலைவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்; நாங்கள் தமிழ் மக்களது நலனுக்காகவே பாடுபடுகிறோம். சமஷ்டிக் கட்சியின் தலைவரான திரு. செல்வநாயகத்தின்மேல் தமிழ்பேசும் மக்கள் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறர்கள். இவ்வாறிருக்க தமிழ்மக்களின் கருத்துக்களை நாம் எடுத்துக கூறவில்லைஎன இலங்கையில் எவரால் துணிந்து கூறமுடியும்?

1956ம் ஆண்டில் இருந்த நிலைமையைச் சிறிது பார்ப்போம். 1956ம் ஆண்டு திரு பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமர் ஆனர் அவரது பெருந்தன்மையாலும் அரசியல் அறிவாற்றலாலும் உலகிலே அவருக்கு நல்ல மதிப்பிருந்தது. அத்தகைய ஒருவர் 1956ம் ஆண்டு சந்தர்ப்ப சூழ்நிலையின் உந்தலால் அவற்றைக்கட்டுப்படுத்த இயலாதவராகி 'சிங்களம் மாத்திரம்' மசோதாவைக் கொண்டு வத்தார். அந்தவேளையில் தமிழ்பேசும் மக்கள் அம்மசோதாவைத தீவிரமாக எதிர்த்தனர் அவர்களைத் தலைமைதாங்கியவர் திரு. செல்வநாயகமே யாவார். இந்தச் சிங்களம் மாத்திரம் மசோதாவை எதிர்த்து அமைதியாகப் போராட வடக்கிலும் கிழக்கிலும் இருந்து மக்களைக் கொண்டுவந்து எதிர்ப்பியக்கத்தை நடாத்தியவரும் அவரே.

இந்தநேரத்தில் நான் உங்களுக்கு ஒன்று கூறவிரும்புகிறேன். தபால் தந்தித்தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியர் எவ்வாறு தற்போதைய பிரதம மந்திரியுடன் நெருங்கிய தொடர்புடையவராக விருக்கிறரோ அதே போன்று நானும் திரு. செல்வநாயகத்துடன் நெருங்கிய தொடர்புடையவரானேன். தமிழ்மக்களின் மொழிக்கு ஆபத்து வந்த அந்தத் தினத்தில் அதை எதிர்த்து காலிமுகத்திடலில் இருந்த எமது தொண்டர்களுக்கு மக்களிடமிருந்தோ கூட்டத்தினரிடமிருந்தோ, சாடையர்களிடமிருந்தோ எதிர்ப்புவருமென நாம் நினைக்கவில்லை. ஆனல் பிரதமர் பொலிசாரைக்கொண்டு இடத்தைக் காலிசெய்வார்; அதனல் தொண்டர்கள் தாக்கப்படுவார்கள் என நாம் நினைத்தோம். ஆனல் நடந்தது என்ன? திரு. பண்டாரநாயக்கா மேற்படிமசோதாவைக் கொண்டுவந்த உடனே ஸ்ரீ. ல. சு. கட்சியில் நிர்வாக அங்கத்தவர்களாக இருந்த எனது நண்பர்கள் இருவர் அக்கட்சியிலிருந்து ராஜினமாச் செய்தனர். அவர்களில் ஒருவர் எம்முடன் சேர்ந்துபோராட காலிமுகத்திடலுக்கே வந்துவிட்டார். அப்போது சுதந்திரக் கட்சியின் உபதலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்த திரு. தங்கராசாவும் திரு. ஜே. சி. நடராசாவுமே அவ்விருவருமாவர். நாங்கள் காட்டிய இந்த எதிர்ப்பின் பயனக திரு. பண்டாரநாக்கா எங்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் உடன்படிக்கைக்கு வந்தார் இந்த உடன்படிக்கையே பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தமாகும்

இந்த ஒப்பந்தம் இருவிதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது என நான் கூறுவேன். முதலாவதாக இது இலங்கையின் மொழிப் பிரிவை எடுத்துக்காட்டியது. காரியாஸ் எழுதிய இலங்கைச் சரித்திரத்தை நீங்கள் வாசித்தீர்களானல் அங்கு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்து தெற்கே தெய்வேந்திரமுனையிலிருந்து வடக்கே பருத்தித்துறைவரை தமிழ்மக்கள் வசித்துவந்தார்கள் என்பதைக் காணலாம். நொக்ஸ்சை வாசித்துப் பாருங்கள் கண்டிராஜ்யத்திலிருந்து தப்பிச் சென்ற போது அவர் அனுராதபுரத்தைத் தாண்டி வேறு ஒரு மொழிபேசும் பிரதேசத்திற்குள் சென்றார். இந்த விடயத்திற்கு நாம்பின்னர் வருவோம், அந்தக் காலத்தில் சிங்கள அரசு திருக்கோணமலைவரைபரந்திருக்கவில்லையென நான்கூறவில்லை அது பரந்து இருந்திருக்கலாம். ஆனல் நான் அந்தப் பகுதியில் ... களை தொழில் புரிந்தவர்களைப்பற்றியே குறிப்பிடுகிறேன்.


அடுத்து இந்த ஒப்பந்தம் மொழிவாரியாகப்பிரதேசப் பிரிவுகளை ஏற்றுக்கொள்ளச் செய்துள்ளது. அது மட்டுமன்றி சிங்கள மக்களதும் தமிழ்மக்களதும் பிரச்னைகளுக்குத்தீர்வுகாண பிரதேச சபைகள் நிறுவப்படவேண்டும் என்பதற்கு திரு. பண்டாரநாயக்கா உடன்பாடு தெரிவித்ததையும் குறிப்பிடுகிறது அந்தவேளையில்இதை எனது மதிப்புக்குரிய நண்பரும் அறிஞருமான நீதியமைச்சர் கூறிய வார்த்தைகள் போன்று திரு. பண்டாரநாயக்கா கூறவில்லை. அவர் திரு. செல்வநாயகத்தின் மூதாதையர்கள் ஆக்கிரமிப்பாளர்களாக வந்து சேர்ந்தவர்கள் என்று கூறவில்லை "நீங்கள் எங்கள் மேல் படையெடுத்து எங்களைத் தாக்கியவர்கள், தமிழர்களாகிய உங்களுக்கு இச் சமூகத்தில் இடமில்லை, நீங்கள் எங்கள் சகபிரஜைகள் அல்ல, இது உங்களது தாய் நாடு அல்ல, ஆகவே நான் உங்களுக்கு எந்தவித சலுகையும் செய்யமாட்டேன்" என்றெல்லாம் அவர் கூறவில்லை.

பல சமூகத்தவர்கள் வாழும் நாட்டில் சிறுபான்மையினரை சமஷ்டியால் மட்டுமே திருப்திப்படுத்தலாம் அல்லது பிரதேசசபைகளினல் திருப்திப்படுத்தலாம் இதுயாவரும் அறிந்த அரசியல் தீர்வாகும். இதை திரு பண்டாரநாயக்காவே ஏற்றுக்கொண்டார். ஆனல் அதன்பின்னர் சம்பவித்த சம்பவங்களால் அவர் உந்தப்பட்டே அந்த ஒப்பந்தத்தை தனது மனச்சாட்சிக்கு விரோதமாக அழித்திருக்கவேண்டும். அவர் வற்புறுத்தப்பட்டார் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் இவர் இவ்வாறு செய்வதற்கு யார் பொறுப்பாளியாக விருந்தார்என நான் கூறவிரும்பவில்லை. எது எவ்வாறுஇருந்தாலும்சந்தர்ப்ப சூழ்நிலைகளே அவரை இந்த ஒப்பந்தத்தைஅழிக்கச்செய்தன என்றே கூறவேண்டும் பல இனத்தவர்கள் வாழும் ஒரு சமூகத்தில் அரசியல் உரிமைகளை சுமத்த வேண்டிய ஒருவித அமைப்பு இருக்கவேண்டுமென்பது இந்த ஒப்பந்தத்தில் உள்ளதை யாவரும் அறிவர்.

ஆகவே சமஷ்டிக் கட்சியினராகிய நாங்கள் சமஷ்டி முறை அரசியல் வேண்டுமெனக் கோருகிறோம். தேவையெனில் அதைக் கெஞ்சிக் கேட்கக்கூட நாங்கள் தயார் ஒரு அரசியல் திட்டம் வகுக்கப்படுகிற நிலைக்குநாம் வந்துள்ளோம் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு, நாங்கள் செய்ய வேண்டிய கடமையென்னவெனில் ஒருசமஷ்டி முறைஅரசைக் கோருவதாகும்.

இது சம்பந்தமாக நான் ஒரு ஆக்கவேலை பற்றிகுறிப்பிடவிரும்புகிறேன் எனது மதிப்புக்குரிய நண்பர் அதிக கவனம் செலுத்தமாட்டார் ஏனெனில் அது 'இரும்புத் திரைக்கு'ப்பின் உள்ள ஒரு நாட்டினதல்ல; அவ்வாக்கவேலை சட்டத்துறைக்கு ஒரு பாடப்புத்தகம்-புதியபொதுந நாடுகளும் அதன் அரசியல் அமைப்புகளும் ('The New Commonwealth and its constitutions') என்ற நூலாகும். லண்டன் பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பேராசிரியரான திரு. எஸ் ஏ. டி. சிமித் இந்நூலை எழுதியுள்ளார் பொதுநலவாயநாடுகள் பலவற்றின் அரசியலமைப்பை ஆராய்ந்த இப்பேராசிரியர் சிறுபான்மையினர் உட்படப்பல இனத்தலைவர்கள் வாழும் ஒரு சமுதாயத்தில் சிறுபான்மையினத்தைத் திருப்திப்படுத்த உள்ள ஒரேயொரு தீர்வு எதுவெனில் ஒரு சமஷ்டி முறை அரசை நிறுவுவதேயாகும். இப்போது இதுவே அடிப்படைத் தீர்வாகும். எல்லாநாடுகளுக்கும் இது அடிப்படையானதாகும். எந்தநாட்டில் வசித்தால் என்ன எல்லாமக்களுக்கும் இது அடிப்படையானதாகும்.

மேற்படி நூலிலிருந்து ஒரு பகுதியை உங்கள் உத்தரவுடன் படித்துக்காட்ட விரும்புகிறேன். இந்நூலின் 106ம் பக்கத்தில் பெரும்பான்மையினரின் அதிகாரத்



திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு வழிகூறப் பட்டிருக்கிறது.

எனவே பெரும் பான்மை அரசின் தீமைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவழி சமஷ்டி அரசியல் அமைப்பாகும். ஆகவேதான் நாம்இப்போது அடிப்படைக் கோரிக்கையைக்கேட்கிறோம். நாங்கள் உங்கள் மேல் அவநம்பிக்கை கொண்டோ அல்லது நாட்டைப் பிரிக்கவேண்டும் என்னும்எண்ணத்துடனேகேட்கவில்லை. ஆனல் இது ஒப்புக் கொள்ளப்பட்ட தொரு பாதுகாப்பு என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறோம். நாங்கள் இச்சமஷ்டி அரசை மதிப்புக்குரிய பிரதமரிடம் கோருவோம்அவர் தரமறுத்தால். அரசாங்கத்திடம் கோருவோம் அரசாங்கமும் அமைப்பதற்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் நாங்கள் சிங்களமக்களைக் கேட்போம் நாங்கள் சந்ததியாக சிங்களமக்களிடம் இதைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருப்போம். ஏனெனில் நாடற்றவர்கள் என்று கூறி கடலுக்குள் தள்ளப்படும் நிலையையோ அல்லது நாட்டைவிட்டுத்துரத்தப்படும் நிலையையோ எம்மால் சிந்தித்துக்கூடப் பார்க்கமுடியாது. நாங்கள் இங்கு வாழ்கிறோம் இங்கு வாழவேவிரும்புகிறோம். ஓர் அரசியல் தீர்வு, அடிப்படைத்தீர்வு, ஒப்புக்கொள்ளப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வு-பல நாடுகளில் செயல்முறையில் உள்ள ஒன்று எனவே தான் நாம் அதை (சமஷ்டி அரசியல்அமைப்பை (கோருகிறோம்.

(தொடரும்)

நடந்த

## பரீட்சைகள் பற்றி ஆராயக் குழு

கோட்டை, செவ்.

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படும் பொதுப்பரீட்சைகள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ளகேடுகளை ஆராயவும், முன்னைய அரசாங்கத்தினல் ஏற்படுத்தப்பட்ட ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள் பற்றி ஆராயவும் மூன்று பேர் கொண்ட குழுவை கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மசூத் நியமித்துள்ளார்.

இக்குழு 1965-ம் ஆண்டு மார்ச் 22ந் திகதியிலிருந்து 1970ம்ஆண்டுமே 27ந்தேதி வரையுள்ள காலங்களில் மாணவ ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டதுபற்றியும் இக்காலங்களில் நடந்தபொதுப் பரீட்சைகளுக்குரிய புள்ளி விபரங்கள் பற்றியும் ஆராயப்படும்.

உதவிக்கல்வி அமைச்சர் துடாவ, தோட்டப்பயிர்ச் செய்கை உதவி அமைச்சர் திரு. அல்பேட் காரியவாசம், அம்பலாங்கொடை எம் பி திரு. எம். சி டி. சில்வா ஆகியோரே இக் குழுவினராகும்

## அயர்லாந்து அமைச்சரின் துணிகரச் செயல்

டப்ளின், ஜூலை 7

வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்துகிறிஸ்தவர்களும் கத்தோலிக்கர்களும் கலவரங்களில் ஈடுபட்ட பகுதிகளுக்கு தென் அயர்லாந்து வெளிநாட்டு அமைச்சர் டாக்டர் ஹில்லரி இரகசியமாக சுற்றுப்பயணம்செய்துவிட்டு திரும்பியதாக அறிவித்திருக்கிறர்.

பெல்பாஸ்டில் கலவரம் நடந்த இடங்களுக்குத் தாம் போனதாகவும், கஷ்டமுற்ற கத்தோலிக்கர்களுக்கு ஆறுதல் கூறியதாகவும்அவர் அறிவித்திருக்கிறர்

வட-அயர்லாந்து அரசுக்கோ பிரிட்டிஷ் அரசுக்கோ அறிவிக்காமல் டாக்டர் ஹில்லரி வடஅயர்லாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்திருப்பதை பிரிட்டிஷ் அரசு குறைகூறியிருக்கிறது.

## வரவேற்பு

சூரிச். ஜூலை 7

ரோமாபுரியிலிருந்துசுவிட்சர்லாந்துக்கு சென்றுள்ள முதலமைச்சர் திரு மு. கருணநிதிக்கு சூரிச் நகரிலுள்ள இந்தியர்களும் மற்றக் கலைஞர்களும் முதலமைச்சருக்கு சிறப்பான வர

மாணவர்கள் மத்தியிலே

இன்று

பக்கல்லூரியாக உயர்ந்து ... 12வது ஆண்டுவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புறவு வைத்திருக்க முடியும்.

வெளி நாடுகளிலுள்ள தூதரகங்கள் பலவற்றினுல் பெருந்தொகைப்பணம் வீணுக் செலவாகின்றது. தூதரகங்கள் இருக்கும் நாடுகளுடன்கூட முக்கியமான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அமைச்சர்களின் தலைமையில் அதிகாரிகள் தூதுக்குழுக்கள் செல்ல வேண்டியிருக்கிறது. முக்கியமான பேச்சுவார்த்தைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் அமைச்சர்கள் சென்றுதாணுக வேண்டுமென்றுல் அந்த நாடுகளில் தூதரகங்கள் எதற்கிருக்கவேண்டும்?

பெரிய வல்லரசு நாடுகளுடன் ராஜீய உறவு வைத்திருக்க வேண்டுமென்றும் அந்த நாடுகளில் பெரிய அளவில் தூதரகங்களிருக்க வேண்டுமென்றும் இதுவரை நமது நாடு ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்திருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது வல்லரசு நாடுகளுடன் ராஜீய உறவு வைத்திருப்பதை ஒரு பெருமையாகவும் நம் நாடு கருதியிருக்கலாம். இந்த வல்லரசு நாடுகளுடன் இதர சில நாடுகள் உறவு வைத்திருப்பதற்கு அவற்றிடமிருந்து ஆயுத உதவி பெறுவது அடிப்படைக் காரணமாக இருக்க

களுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சமீபத்தில் சென்று திரும்பியதும் வெளிநாட்டு உறவிலும் வர்த்தகத் தொடர்பிலும் நல்ல வெற்றியளித்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள நமது ராஜீயப் பிரதிநிதிகளை மாற்றுவதால் மட்டும் பயனில்லை. ஆளும் கட்சிக்காக உழைத்த விசுவாசமுள்ளவர்களுக்குப் பதவியளிப்பதற்காக செய்யப்படும் மாற்றமாக இது கருதப்படக்கூடும். எந்த விதத்திலும் பயன் தராத இடங்களிலுள்ள தூதரகங்களை மூடிவிட்டு இதர இடங்களிலுள்ள தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைத்து நமது நாட்டின் செலவைச் சுருக்கிக் கொள்ளும் அதே சமயம் முன்னேற்றமடைந்துவரும் சிறிய நாடுகளுடன் ராஜீயத்தொடர்பை ஏற்படுத்தி வர்த்தகத் தொடர்பை அடிப்படையாகவைத்து புதிய தூதரகங்களைத்திறக்கவும் வேண்டும்:

இந்த வகையில் யூகோஸ்லாவியா, கென்யா, கனியா முதலிய நாடுகளில் புதிய தூதரகங்களைத் திறக்கும் அரசாங்கத்தின் யோசனை வரவேற்கக்கூடியது.

## புதிய அமெரிக்க தகவல் அதிகாரி

கொழும்பு, செவ்

அமெரிக்க தகவல் இலாகாவின் புதிய தகவல் அதிகாரியாக திரு. ருெபேட் ஏ. மெரியன் பதவியேற்றுள்ளார்: இவருக்கு முன்பு இப்பதவி வகித்த திரு. ரிச்சர்ட் ஏ. வொன்கிளாட்ஸ் ஜூலை மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாயகம் திரும்பினுர்.

திரு. மெரியன் இலங்கை வருவது இது முதற்தடவையாக இருந்த பொழுதிலும உலகின் இந்தப் பிராந்தியத்திற்கு அவர் புதியவரல்லா. தனது குழந்தைப் பராயத்தில் பெரும் பகுதியை இந்தியாவில் கழித்த திரு. மெரியன் பின்பு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பல பதவிகளை வகித்துள்ளார். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இவர் வாஷிங்டனில் "வொய்ஸ் ஒவ்அமெரிக்கா" வானெலி நிலையத்தின்தென் ஆசியப் பிரிவின்தலைவராகபணியாற்றியுள்ளார்.

திரு. மெரியனுடன் அவரது பாரியாரும் மூன்று புதல்வர்களும் இலங்கை வந்துள்ளனர்.

## சாம்பியன் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றைய வீரர்களான, பெர்ணுண்டோ, ஜெசுராசா, நடேசானந்தன், பத்மசுந்தரம், மகேந்திரன், ஸ்ரீகிருஷ்ணராசா ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இம்மாதம் 14-ம் திகதி யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும் இப்போட்டிக்கு யாழ்ப்பாண மாநகர சபைமுதல்வர் திரு. ரி. துரைராசா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார்.

(தே. நி.)

— —

யாழ்ப்பாணம்; புதன்

தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய நிபுணரான திரு ஏ.சி. ஜெயசூரியாவை இங்கிருந்து இரத்தினபுரிக்கு மாற்றம் செய்ய முயற்சிப்பதை அவரின் விசேட திறமையையும் நற்பண்பையும் அறிந்துள்ள யாழ்ப்பாண மக்கள்வன்மையாக எதிர்த்துள்ளனர்.

குறைந்தது ஒருவருடமாவது இவரை இங்கு கடமையாற்ற அனுமதிக்கும்படி பிரதம மந்திரியையும் சுகாதார அமைச்சரையும் கோருவதற்காக யாழ் மாவட்டத்திலுள்ள பொது மக்களிடம் கையெழுத்துச் சேர்க்கப்பட்டு வருகின்றது.

ளுக்கு மக்களிடமிருந்தோ கூட்டத்தினரிடமிருந்தோ, சாடையார்களிடமிருந்தோ எதிர்ப்புவரு

...லையென நான்கூறவில்லை அது பரந்து இருந்திருக்கலாம். ஆனுல் நான் அந்தப் பிரதேசங்களில் இருந்தவர்

ஒப்பந்தத்தை அழிக்க அமைச்சர் தன என்றே கூறவேண்டும் பல இனத்தவர்கள் வாழும் ஒரு சமூகத்தில் அரசியல்

விரும்புகிறேன். இந்நூலின் 106ம் பக்கத்தில் பெரும்பான்மையினரின் அதிகாரதி

கிருேம்.


(தொடரும்)

சர்லாந்துக்கு சென்றுள்ள முதலமைச்சர் திரு மு. கருணுநிதிக்கு சூரிச் நகரிலுள்ள இந்தியர்களும் மற்றக் கலைஞர்களும் முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பளித்தனர்.

— —

இன்று

# 11வது ஆண்டுவிழா கொண்டாடும் யாழ். தொழில் நுட்பக்கல்லூரி



மாணவர்கள் மத்தியிலே வலுப்பெற்றுவரும் வேலையில்லாப் பிரச்னையை நீக்குமுகமாக இலங்கை அரசாங்கத்தால் நாடெங்கும் பல தொழில் நுட்பக்கல்லூரிகள் நிறுவப்பட்டன. நியூசிலாந்து அரசாங்கத்தின் நன்கொடையுடன் கொழும்புத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட இந்தக் கல்லூரிகளில் தமிழ் மக்களுக்கென நிறுவப்பட்டு தமிழ்மொழியைப் போதனுமொழியாகக்கொண்டு இயங்கிவரும் ஒரேயொரு நிலையம் நமது யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில்நுட்ப நிலையமாகும்

1959ம் ஆண்டு 50 மாணவர்களுடன் திரு கிட்ணபிள்ளை அவர்களை அதிபராக்கொண்டு கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி படிப்படியாக உயர்ந்து இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வி பயிற்றுவிக்கும் நிலையமாக விளங்கிவருகிறது 1961ம் ஆண்டு திரு. க. நாகலிங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றதை அடுத்து அவரின் அயராமுயற்சியால் பல போதனைத் துறைகள் இங்கு ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் கட்டிடங்களும் விஸ்தரிக்கப்பட்டன அளந்தலும் மட்டம் பார்த்தலும் படம்வரை அறிஞர் போதனையினம் போன்ற போதனையினங்களும் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டுப்பெத்தை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் மட்டுந்தான் படம்வரை அறிஞர் போதனை ஆங்கிலமொழி மூலம் போதிக்கப்பட்டுவந்தது. திரு. க. நாகலிங்கம் அவர்களின் முயற்சியினுல் இப்போதனையினம் சிங்கள மொழி மூலம் போதிக்கப்படாமலிருக்கும் இவ்வேளையிலும் நமது நிலையத்தில் கடந்த வருடம் தொடக்கம் தமிழிலும் போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நமது நிலையத்தைத் தலைசிறந்த தொழில்நுட்ப நிலையமாக உயர்த்திவைத்த பெருமை முன்னைநாள் அதிபர் நாகலிங்கம் அவர்களையே சாரும். ஒரு காலத்தில் இங்கு மாணவர்களை ஆசிரியர்களே வலிந்தழைத்துச்

சேர்க்கும் நிலையிருந்தது. இன்று அந்த நிலைமை மாறி வருடத்துக்கு ஆறுயிரம் மாணவர்கள் எழுத்துப் பரீட்சை மூலம் விண்ணப்பித்து முன்னூறு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த வருடத்திலிருந்து எமது கல்லூரியின் சிரேஷ்ட போதனுசிரியராக இருந்த மதிப்புக்குரிய திரு. சீ. டா. ஜெயசிங்கம் அவர்களை அதிபராகக்கொண்டு மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது

இன்று திரு. சீ. டா. ஜெயசிங்கம் அவர்களை அதிபராகக்கொண்டு இயங்கிவரும் எமது நிலையத்தின் 11வது ஆண்டுவிழாவை மாணவர் மன்றம் மிகவும் சிறந்த முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுசெய்திருக்கிறது இம்மன்றத்தின்கீழ் பொறியியல் மன்றம். வணிக மன்றம், தொழில் மன்றம். சைவ மன்றம் என நான்கு மன்றங்கள்

இயங்கிவருகின்றன. மாணவர் மன்றம் எல்லா மன்றங்களையும் ஒருங்கமைத்து மாணவர்களின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத்திற்குமாக உழைத்துவருகின்றது. இம்மன்றம் மாணவர்களுடைய போதனையிலுள்ள கஷ்டங்களையும், வேறு பல கல்லூரியில் உள்ள கஷ்டங்களையும் அதிபரிடம் தொடர்பு கொண்டு அல்லது அதிபரின் மூலம் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவற்றையெல்லாம் விலக்கி மாணவர் சமுதாயத்திற்கு ஒரு முதுகெலும்பாகஇயங்கி வருகிறது.

வேண்டியிருக்கிறது. இதைச் சிரேஷ்ட தொழில்நுட்ப நிலையமாக்கவேண்டும் என முன்னைநாள் அதிபர் திரு. நாகலிங்கம் அவர்களும், தற்போதைய அதிபர் திரு ஜெயசிங்கம் அவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பெருமுயற்சி செய்தும் அது முற்றுப்பெருமல் இருக்கிறது. கடந்த வருடம் எமது கல்லூரியின் ஆண்டு விழாவுக்குப் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கல்வித் துணை மா இயக்குநர் (தொழில்நுட்பம்) கலாநிதி எஸ். எல். டி. சில்வா அவர்கள் ஒருசில மாதத்திற்குள் எமது நிலையம் சிரேஷ்ட தொழில்நுட்ப நிலையமாக

**கு: சண்முகலிங்கம்**
**செயலாளர், மாணவர் மன்றம்**

இன்றைய விழாவை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அதேவேளையில் ஆண்டுதோறும் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கும் எமது நிலையம் இதுவரையிலும் கனிஷ்ட தொழில் நுட்பநிலையமாகவே இயங்கி வருகிறதென்பதை வேதனையுடன் நினைவுகூரத்தான்

மாற்றியமைக்கப்படும் என வாக்குறுதி யளித்திருந்தார். இன்னும் அது வாக்களவில் தான் இருக்கிறது.

இந்த நிலைமை மாறி இன்று கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியாக இருந்து 11வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் நமது கல்லூரி சிரேஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியாக உயர்ந்து தனது 12வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்வகையில் நமது அரசாங்கம் சகல உதவிகளையும் செய்து தருமென எதிர்பார்க்கின்ருேம்.

## விழா நிகழ்ச்சிகள்

இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கனிட்ட தொழில் நுட்ப நிலைய அரங்கில் நடைபெறும் மேற்படி கல்லூரியின் 11 வது ஆண்டு விழாவின் நிகழ்ச்சிகள் வருமாறு:

கல்லூரிக் கொடி ஏற்றுதல்—திரு. க, நாகலிங்கம் (முன்னுள் அதிபர்). கல்லூரி கீதம்—கல்லூரி மாணவர்கள், வரவேற்புரை—செல்வன் த. முத்துக்குமாரசாமி (தலைவர், மாணவர் மன்றம்) கல்லூரி அறிக்கை வாசித்தல்—அதிபர் திரு சி. டா. ஜெயசிங்கம், பிரதம விருந்தினர் உரை—திரு. வே. சங்கரலிங்கம் (வடமாநிலக் கல்வி இயக்குனர்), பரிசில் வழங்கல் திருமதி வே. சங்கரலிங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள்—கலாநிதி க. மகாதேவா, திரு. வ. பொன்னம்பலம், திரு. பி. பாலநாதன்

றெக்ஸ் குழுவினரின் மெல்லிசையும் விழாவில் இடம் பெறும்.

— —

## குழந்தைகள் ஆச்சிரம நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள்

ஸ்ரீபரமானந்தா குழந்தைகள் ஆச்சிரம உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். காவலர் சுவாமி பரமானந்தா, தலைவர் சுகாதார அமைச்சின் முன்னுள் நிரந்தரக் காரியதரிசி. திரு. வி. பாலசிங்கம் உப தலைவர்கள் திருவாளர்கள் ஏ. வைத்தியலிங்கம் (மாவட்ட நீதிபதி), சீ. எம். தர்மலிங்கம், (மாவட்ட நீதிபதி), கே. விக்னராசா (பொலிஸ் நீதிபதி), எஸ். தணிகாசலம் (கல்விவித்தியாதிபதி), ஆர். சுந்தரலிங்கம் (பொலிஸ் அதிபர்), டாக்டர் ஸ்ரீ பத்மநாதன், செயலாளர்: திரு. வி. எஸ். கந்தப்பு (வங்கி மனேஜர்) உதவிச் செயலாளர் டாக்டர் எஸ் கதிர்காமத்தம்பி பொருளாளர் திரு. டி. பாலேந்திரன் இருபது பேரைக் கொண்ட ஓர் ஆலோசனைக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஆசிரியருக்குக்கடிதம்

## சமயபாடத் திட்டம்

'சைவ சித்தாந்தத்துக்கு என்று ஒரு பாடத்திட்டமும் இந்து சமயத்துக்கு என்று வேறு பாடத்திட்டமும் இருக்கும்படி ஏன் செய்யப்படாது?' எனக்கூறும் சமய பாடத் திட்டம் பற்றிய ஈழநாடு 4-7-70 இதழ் ஆசிரியத் தலையங்கம் வரவேற்கப்படவேண்டிய ஆலோசனைகளையுடையதாகும்.

சமீபத்தில் உயர்தர வகுப்புக்கு வகுக்கப்பட்ட பாடத்திட்டம் மாத்திரமே மேற்காட்டிய குறிக்கோள் இடம் பெறுவதாகும் கல்வி அமைச்சரினுல் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பெற்ற பழையபாடத் திட்டம். தலையங்கம் குறிப்பிடும் வகையிலேயே அமைந்தது. உயர்தர வகுப்புப் பாடத்திட்டம் மாத்திரமன்றிச் சாதாரண க பொ. த. பரீட்சைப் பாடத்திட்டமும் அவ்வாறே அமைந்தது. இத் திட்டங்களில் மூன்று பிரிவுகள் உள முதலாம் பிரிவு எல்லா இந்து சமயத்திற்கும் பொதுவான விடயங்கள். இரண்டாம் பிரிவு சைவ சித்தாந்தம். மூன்றும் பிரிவு ஏனைய இந்து சமயப் பிரிவுகளின் சிறப்பு விடயங்கள்: இவற்றுள் முதலாவதும் ஏனையவற்றுள் ஒன்றுமே கட்டாயம் எல்லோர்க்கும் பயன்படத்தக்க அரிய திட்டம் இது. இத்திட்டத்தைக் கைவிட்டதாலேயே புதியபாடத் திட்டம் பிரச்சினைக்குரியதாயிற்று. அதிலே சைவசித்தாந்தத்திற்கென இருந்த இரண்டாவது சிறப்புப் பிரிவு இடம்பெறவேயில்லை. அதனுலேயே பலத்த பிரச்சினைக்குரியதாகி ரத்துச் செய்யப்பட்டது:

பாடத்திட்ட விடயத்திலே இலங்கைவாழ் சைவ மக்கள் ஒன்று சேர்ந்தமை வரலாற்றுப்பெருமைவாய்ந்தது.

க. கணபதிப்பிள்ளை
செயலாளர்,
நாவலர் பெருமான் கந்தபுராண சபை.
கல்லூரி வீதி.
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org